உ

தேவர் மூவர் யாவர்களின்

தலைவிதி கீர்த்தனை.

சென்னை சூளை

நிரஞ்சனவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923

கடவுள் துணை.

தலைவிதி கீர்த்தனை

கணபதிதுதி-வெண்பா.

விண்ணுலகத்தேவர்களும் வேந்தர்களும்பட்டதுயர்
மண்ணுலகத்தாருணர மாமறையை-கண்ணுற்றே
சாற்றுமித்தலைவிதிக்குச் சங்கரர்க்கும்யாவர்க்குமுதல்
தோற்றுகஜமுகனடியே துணை.

பல்லவி,

ஆரைவிட்டதுகாண் விதிவசம்
ஆரைவிட்டதுகாண் தலைவிதி
யெவரைவிட்டதுகாண்.

ஆரைவிட்டது யீஸ்வரனுமைரிம்
ஐயர்நிரந்துண்ணும் வையகமீதினில்
பாருள்ளவேலவர் வள்ளிக்காசைபட்டு
பாங்கானவேங்கை மரமாகிநின்றதும் ஆரை

சீதைபிறந்ததும் லங்கையழிந்ததும்
தேவேந்திரன்கண்க ளாயிரமானதும்

சூதாடிஐவர் வனவாசம்சென்றதும்
சொல்லுக்கரிச்சந்திரன் தான்விலையானதும் ஆரை

கர்னன்பிறந்ததும் ஐவர்வனவாசம்
காட்டினில்சென்றதும் நாட்டைமறந்ததும்
மன்னன்துரியோதிரன் சேனையழிந்ததும்
வாலகுருவாலருய் கூடியிருந்ததும் ஆரை

வாழுத்திருமால் வனவாசம்சென்றதும்
மார்க்கண்டனுக்காக யெமனையுதைத்ததும்
மூலபலங்களும் ராவணன்சேனையும்
முத்தித்திருவோடு சித்தமதானதும் ஆரை

பிரமன்சிரமென்று பின்னமாய்ப்போனதும்
பெண்ணுக்களானதும் பிச்சையெடுத்ததும்
தர்மரைப்போல்நளன் தாரணிவிட்டதும்
தசரதன்பிள்ளையால் தாடகைபட்டதும் ஆரை

இந்திரன்சேவலைப் போலேயிறைந்ததும்
யெழுந்துகௌதம ரிறைகடல்சென்றதும்
தந்திரமென்றுஞான திஷ்டியிற்பார்த்ததும்
தக்ஷணமகலியை கல்லாய்சமைத்ததும் ஆரை

பூர்வசக்ரவர்த்தி புகழேந்திநின்றதும்
பொல்லாஇரணியன் பிள்ளையால்மாண்டதும்

தார்புகழ்சோமுகா சூர றந்ததும்
தானென்றமன்மத நீராயெரிந்ததும் ஆரை

சந்தராந்தரிஷி கண்கள்சிவந்ததும்
சங்கரன்பார்த்தனால் அங்கமெலிந்ததும்
சந்திரன்யாக்கையின் வருவங்குறைந்ததும்
சாற்றவொண்ணுபல வாலிமடிந்ததும் ; ஆரை

பருவப்பெண்ணைத்தலையிற் பற்றிசுமப்பதும்
பாரதயுத்தத்தில் சாரதியானதும்
சிறுமணவூர்முனி சாமிசொன்னனிதை
சிந்தனைசெய்வாரோ நிந்தனைசெய்வாரோ. ஆரை

முற்றிற்று.

வேறு--மெட்டு.

எந்தவழிவிட்டுவிடுமோ-தலையின்விதி
எந்தவழிவிட்டுவிடுமோ.

இந்தஜெகபந்தமறுத் தீடேற்றிவைத்திடுமோ
வந்துவந்துபிறந்துழல வாவென்றிழுத்திடுமோ எந்த
எல்லார்க்கொருவனவன் ஆளாக்கிவைத்திடுமோ
பொல்லாநரகமுய்ய போவென்றுதுறத்துமோ எந்த

மாயாப்பிறவிதன்ப மதுக்கரைகடைத்திடுமோ
நாயாய்ப்பிறந்துழல கடவென்றுதுரத்துமோ எங்

விண்ணவர்க்குதொண்டு செய்யவேண்டுந் தடங்காட்டிடுமோ, கண்ணின்வலைமாதர்மோக மயற்கொடுத்திழுத்திடுமோ. எங்

அத்தனதுசேவடிக்கி அன்பனாயமைத்திடுமோ
பாக்யவானாய்ப்பிறக்க கடவென்றுதுரத்துமோ எ

ஆசனங்காட்டியெனக் கருளமுதமூட்டிடுமோ
கர்த்தனைக்காணாமலே பாழ்கிணற்றிற்றள்ளிடுமோ எங்

மானைத்தரித்தவன்றன் மலரடிக்காளாக்கிடுமோ
ஈனப்பிறவிதர் திகத்தினற்றாத்திடுமோ எங்

தொண்டருக்குதொண்டனாகி தொண்டு செய்யவைத்திடுமோ, மண்டலத்து மாதருக்கென் மதியினைகொடுத்திடுமோ எங்

சாயுச்யமளித்து முனிசாமிதனை கார்த்திடுமோ
காயசுத்தியற்றஜெகக் காட்டினிற்றாத்திடுமோ

எந்தவழி விட்டுவிடுமோ தலையின்விதி
எந்தவழிவிட்டுவிடுமோ.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

நானேயெடுத்ததிரேகம் நாளையிது
வீணாயழிந்துபோகும் நா

அநுபல்லவி,

வனேபாதகஜென்மம்
நானேயெடுத்தேன்பா
வானோர்பணியும்பெரு
மானையுனைத்தொழாமல் நா

சரணங்கள்.

கருவுதரித்தபோது எண்சாண்
உருவமெடுப்பதேது
உருவாய்த்திரண்டுருண்டு
ஒன்றாய்முளைத்தெழுந்து
பிரியமாய்உரைப்பதேதனே
பெரியோருரைத்தனர்கள் நா

உத்தாருறவின்முறையார் நானே
செத்தாலெவருமுதவார்

சுத்தமுடன் உடலை
சுடுகாடெடுங்களென்பார்
அத்தாவுன்சேவடிக்கி
ஆளாகினேன் சுவாமி நா

காமக்குரோதத்தாலே பாழ்மனம்
தாமஷப்படலாமோ
சோமசுந்தரகந்த
சாமினுனுந்தனிட
நாமந்தனைமறந்து
பூமிதனிலுழன்று நா

கேடுகெட்டபாழுடலே நானே
பாடுபட்டுலகின்மேலே
தேடிதட்டில்வீடுகட்டி
சேர்த்துவைத்துபார்த்திருந்தால்
கூடுவிட்டுஉயிர்போனல்
கூடவாராதொருக்காலும் நா

எண்சாணுடலும்நானே ஒரபிடி
வெண்சாம்பலாகும்வேளை
பெண்பாலுறவின்முறை
கண்ணீர்சொரிந்தழுது

என்பார்பலவிதமாய்
கண்பாரிதுசமயம் ந

நந்தகோவிந்தன்மருகா அடியேனை
வந்தாளும்செந்தில்முருகா
மைந்தன் தாமோதரன் சொல்
செந்தமிழுக்கிறங்கி
கந்தா கெதிவேறில்லை
வந்தாளிதுசமயம் ந

தலைவிதிக் கீர்த்தனை

முற்றிற்று.